கட்டுரை 04 · ARTICLE 04 | தொல்காப்பியமும் சங்க இலக்கியமும் அற இலக்கியமும்

# கலித்தொகையில் மொழி சாரா செய்திப்பரிமாற்றம்

*Non-Verbal Communication in Kalittokai*

**முனைவர் ச. மீனாட்சி**

உதவிப் பேராசிரியர், முதுகலைத் தமிழ்த்துறை
தி ஸ்டாண்டர்டு ஃபயர் ஒர்க்ஸ் இராஜரத்தினம் மகளிர் கல்லூரி, சிவகாசி

***Dr. S. Meenakshi**, Assistant Professor, PG Department of Tamil, The Standard Fireworks Rajaratnam College for Women, Sivakasi*

**மின்னஞ்சல்:** meenakshis-tam@sfrcollege.edu.in

**பக்கங்கள்:** 22–29

### ஆய்வுச் சுருக்கம்

தனிமனிதன் சமுதாயத்தோடு ஒன்றிணைந்து வாழ அவனுக்குச் செய்திப்பரிமாற்றம் தேவையாகின்றது. தொடக்க காலத்தில் மனிதன், மொழி தோன்றும் முன்பு ஒலிகள், மணியடித்தல், பறையறைதல், புகையெழுப்புதல், தீயம்புகளை வானத்தில் எறிதல், வண்ணங்கள், சைகைகள், கூவியழைத்தல் போன்றவற்றின் வாயிலாகத் தன்னைச் சுற்றியுள்ளவர்களுக்கு தத்தமது செய்திகளைத் தெரிவித்துள்ளான். காலப்போக்கில் மொழிவழிச் செய்திகளை அறிவிக்கக் கற்றுக் கொண்டான். செய்திப் பரிமாற்றக் கருவியின் முன்னோடியே ஒரு மனிதனின் உடலசைவுகளும் மெய்ப்பாடுகளுமே ஆகும். இவற்றின் வாயிலாக கலித்தொகையில் இடம்பெற்றுள்ள மொழிசாரா செய்திப்பரிமாற்ற முறைமைகளைப் பற்றி ஆய்வதாக இவ்வாய்வுக் கட்டுரை அமைகின்றது.

**திறவுச்சொற்கள்:** செய்திப் பரிமாற்றம்; மொழி; மெய்ப்பாட்டியல்; ஒலி; ஒளி

### Abstract

To live as part of society, an individual needs to communicate. In the earliest times, before language emerged, human beings conveyed their messages to those around them through sounds, the ringing of bells, the beating of drums, smoke signals, fire-arrows shot into the sky, colours, gestures and calling out. Over time they learned to communicate through language. The forerunner of every instrument of communication is the human body itself, with its movements and its expressions of emotion (meyppāṭu). This article examines, through these, the forms of non-verbal communication recorded in Kalittokai.

**Keywords:** communication; language; meyppāṭṭiyal (the study of emotional expression); sound and light

## அறிமுகம்

உலகில் ஆறறிவு படைத்த மனிதன் மட்டுமே நல்லவைகளை பகுத்து ஆராயக் கூடிய திறமுடையவன். இருப்பினும் சமூகத்தில் உள்ளத்தின் வழி - உண்மை வழி இயங்கக் கூடியவர்கள் குறைவாகவே காணப்படுகின்றனர். மனிதனின் உள்ளத்தில் தோன்றும் உணர்ச்சிகள் பலவாகும். தீய உணர்ச்சிகளை அப்படியே வெளிப்படுத்தினால், பிறர் நம்மை தவறாக எண்ணுவார்கள் என்ற அச்சம் காலங்காலமாக மனித சமுதாயத்தில் உள்ளது. எனவே, பேசுவோர் அவ்வுணர்ச்சிகளை ஒருசேர வெளிப்படுத்துவதில்லை. பலவற்றை அடிமனத்தில் தேக்கி வைத்திருப்பர். வாய்ப்பு நேரும் போது, அவற்றை வெளிப்படுத்துகின்றனர். கேட்போரின் மனநிலை, சூழல், சமூகப் பின்னணி ஆகியவற்றிற்கு ஏற்பத் தம் உணர்ச்சிகளுள் சிலவற்றைப் பேச்சாலும் மெய்ப்பாட்டாலும் வெளிப்படுத்துவர். இவ்வாறு, தன்னுடைய உணர்ச்சிகளை - சிந்தனைகளை வெளிப்படுத்தும்

வழிமுறையே மொழி சாரா செய்திப்பரிமாற்றமாகும். இப்பரிமாற்ற முறையானது கலித்தொகையில் இடம்பெற்றுள்ள முறையினைப் பற்றி ஆய்வதாக இவ்வாய்வுக் கட்டுரை அமைகின்றது.

## ஆய்வு நோக்கம்

இன்றைய சூழ்நிலையில் அறிவியல் தொழில்நுட்பக் கருவிகள் பெருகியுள்ளன. எனவே செய்திகளைப் பரிமாற்றம் செய்வது மிகவும் எளிமையான செயல். இருப்பினும் சங்க மாந்தர்கள் தொழில்நுட்பக் கருவிகளின் உதவியின்றி தத்தமது செய்திகளை பிறரிடம் தெரிவித்துள்ளனர். எந்தவொரு தொழில்நுட்பக் கருவிகளும் இல்லாதக் காலத்தில் சங்க மாந்தர்கள் செய்திகளை பரிமாறிக் கொள்ள உதவியாக இருந்த முறைமைகளைக் கண்டறிவதாகவே இவ்வாய்வு அமைகின்றது.

## ஆய்வு ஆதாரங்கள்

சங்க இலக்கியங்கள் பதினெண்மேற்கணக்கு நூல்கள், பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் என்று வகைப்படுத்தப்படுகின்றன. இவற்றுள் பதினெண்மேற்கணக்கு நூல்கள் எட்டுத்தொகை மற்றும் பத்துப்பாட்டு என்று வரையறுக்கப்படுகின்றன. எட்டுத்தொகையில் ஒன்றாகிய கலித்தொகை மட்டுமே ஆய்வின் முதன்மை ஆதாரமாக மேற்கொள்ளப்படுகின்றன. மேலும் செய்திப்பரிமாற்றம் தொடர்பான அனைத்து இலக்கிய, இலக்கண மற்றும் ஆய்வுக்கோவை நூல்கள் துணைமை ஆதாரங்களாக மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## ஆய்வு முறைமை

“கலித்தொகையில் மொழி சாரா செய்திப்பரிமாற்றம்” என்ற ஆய்வுக்கட்டுரையில் விளக்க முறைத்திறனாய்வு முறையில் அணுகப்படுகின்றது.

## செய்திப்பரிமாற்றம்

மனிதன் சிந்தனையைப் பொதுவாக்கிப் பகிர்ந்து கொள்ள முயலும் முயற்சியின் விளைவே, செய்திப்பரிமாற்றம் ஆகும். செய்திப்பரிமாற்றம் என்பது, ஒருவர் மற்றொருவருடன் தம் எண்ணங்கள், கருத்துகள், உணர்ச்சிகள், செய்திகள் போன்றவற்றைப் பரிமாறிக் கொள்ளும் செயலாகும். செய்திப்பரிமாற்றத்தினை ஆங்கிலத்தில் ‘Communication’ என்று கூறுவர். தமிழ் - ஆங்கில அகராதி Communication என்ற சொல்லுக்கு “அறிவிப்பு, அறிவிக்கும் செயல், அறிவிக்கப்பட்ட பொருள், தெரிவிக்கப்பட்ட செய்தி, தொடர்பு, செய்தி இணைப்பு, மடல் போக்குவரத்து, பங்குகொடு, பகிர்ந்துகொடு, இணைப்புவழி, அறிவி, தெரிவி, கற்பி, வெளிப்படுத்து, கொடு, அளி, தொடர்புகொள், பங்குகொள்”[1] என்று பல்வேறு பொருள்களைத் தருகின்றது. ‘Communication’ என்ற சொல்லுக்குப் “பொதுவாக்கு, பகிர்ந்து கொள், செயல்விளைவுப் பயன், செய்தியைப் பரப்பு”[2] ஆகிய பொருட்கள் உண்டு என்று தகவல் தொடர்பியலாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

## செய்திப்பரிமாற்ற வகைகள் (Types of Communication)

செய்திப்பரிமாற்றத்தில் பல்வேறு வகைகள் உள்ளன. எனினும் அடிப்படையில் ‘மொழிசாரா செய்திப்பரிமாற்றம், மொழிசார் செய்திப்பரிமாற்றம்’ என்ற பாகுபாடே காணப்படுகின்றது.

## மொழிசாரா செய்திப்பரிமாற்றம் (Non – Verbal Communication)

இலக்கியங்களில் மொழிசாரா, மொழிசார் ஆகிய இரு செய்திப்பரிமாற்றங்களுமே நடைபெற்றுள்ளன. சமூகமாக இணைந்து வாழ்கின்ற மக்களுக்கிடையே நடைபெறுகின்ற செய்திப்பரிமாற்றத்தை, அவை நிகழும் முறைகளை அடிப்படையாகக் கொண்டு பாகுபடுத்த முடியும். வாய்மொழியாகவோ, எழுத்து வடிவமாகவோ செய்திப்பரிமாற்றம் நிகழவில்லையாயின், அதனை ‘மொழிசாரா செய்திப்பரிமாற்றம்’ என்று குறிப்பிடலாம்.

மொழிசாரா செய்திப்பரிமாற்றத்தில் மொழிக்கு இடமில்லை. பேச்சு மொழி, எழுத்து மொழி இன்றி உடலசைவுகள், மெய்ப்பாடுகள் போன்றவற்றின் வாயிலாக நடைபெறும் செய்திப்பரிமாற்றம் ‘மொழிசாரா செய்திப்பரிமாற்றம்’ எனப்படும். சில உணர்ச்சிகளைக் குரல் வழி வெளிப்படுத்துவதை விட, உடல் வழி (மொழியின்றி) வெளிப்படுத்துவது மென்மையாக இருக்கும்.

## உடல்மொழி - விளக்கம்

உடல்மொழி என்பதை ஆங்கிலத்தில் ‘Body Language’ என்பர். உடல்மொழி என்பது பேச்சு வடிவிலோ எழுத்து வடிவிலோ அமையாமல் உடல் உறுப்புகள் அசையும், செயல்படும் வகைகளிலும், ஓர் உடலுக்கும் இன்னொரு உடலுக்கும் இடையே இருக்கும் இடைவெளி நெருக்கத்திலும், முகஉணர்ச்சி வெளிப்பாடுகளிலும், கை அசைவுகளிலும், சைகையானது உடல் மொழியாக வெளிப்படுகின்றது. இரா.ரம்யா மகேஸ்வரி என்ற நூலாசிரியர் தன் நூலில், “உள்ளத்தில் தோன்றும் உணர்ச்சிகளை முகபாவனைகள், உடலசைவுகள் வழியாக வெளிப்படுத்துவதே ‘உடல்மொழி’ எனவும் வரையறுக்கலாம். உடல் மூலம் வெளிப்படுத்தப்படும் அனைத்து செயல்களும் ‘உடல்மொழி’ எனப்படும். உள்ளம் பேசும் மௌன மொழியானது காதலை மட்டுமல்ல் அன்பு, பாசம், நட்பு, பகை, கோபம், வெறுப்பு, விரக்தி, மகிழ்ச்சி, குதூகலம் போன்ற உடல்மொழிகளையும் தெளிவாக உணர்த்தும் ஆற்றல் வாய்ந்தது”[3] என்ற முறையில் சுட்டுகின்றார். இதனால், செய்திப்பரிமாற்றம் வாய்மொழி மூலம் மட்டுமே நடைபெறுவதில்லை. எப்போதும் உடல்மொழியும் இணைந்து வெளிப்பட்டுக் கொண்டே இருக்கும் என்பது புலனாகின்றது.

தொல்காப்பியத்தில் உடல்மொழி மெய்ப்பாடுகளின் அடிப்படையில் விளக்கம் பெறுகின்றது.‘நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை’ என்று எண்வகை மெய்ப்பாடுகளைத் தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ளார். “ஒன்றைத் தெரிவிப்பதற்கு மொழி உதவுவது போல உடல்மொழியும் பயன்படுகின்றது. உடல்மொழி (Body Language) மெய்ப்பாடு என்றும் வழங்கப்படுகின்றது”[4] என்பர். உடல்மொழியின் பொருள் அனைவராலும் ஒன்றுபோல் புரிந்து கொள்ளக் கூடியதாகும். ஆனால், சைகைமொழியோ குறிப்பிட்ட குழுவினருக்கு மட்டுமே புரியக்கூடியதாகும்.

## தலை

மனிதர்களின் மனவெளிப்பாடுகளாகத் தலையை அசைத்தல், தலை குனிதல் போன்ற செயல்பாடுகள் உள்ளன. தலையை அசைத்தல் என்பது, ஒரு கருத்தை ஏற்றுக் கொள்வதையோ அல்லது மறுத்தலையோ குறிக்கும். தலை குனிதல் என்பது நாணப்படுதல், அவமானம், செயலற்ற தன்மை ஆகியவற்றைக் குறிக்கும். மனித உடல் உறுப்புகளுள் ஒன்றான தலைப்பகுதி செய்திப்பரிமாற்றத்திற்குப் பயன்படும்

பாங்கினை கலித்தொகையின் வாயிலாக அறிய முடிகிறது. தலைவியைப் பார்க்க வந்த தலைவன், தலைவியைச் சந்திக்க இயலாமல் வருந்திய மனதோடு தோழியைப் பார்க்கின்றான். தோழி, தலைவனைப் பார்க்கும் போது தலையைக் குனிகின்றான். இதனைக் கலித்தொகை,

“பல்ஊழ் பெயர்ந்து என்னைநோக்கும் மற்றுயான்நோக்கின்
மெல்ல இறைஞ்சும் தலை”

(கலி.61: 5-6)

என்று சுட்டுகின்றது. இங்கு, தலைவன் தலை குனிதல் என்பது அவனுடைய மனவருத்தத்தையும் செயலற்ற தன்மையையும் உணர்த்துகின்றது. இதில் தலை குனிதல் என்ற உடலசைவு வழிச் சொற்கள் இன்றி, செய்திகள் உணர்த்தப்படும் மொழிசாரா செய்திப்பரிமாற்றத்தைக் காணமுடிகிறது.

## கூந்தல்

இலக்கியங்கள் கூந்தலின் வேறுபெயர்களாக அளகம், பித்தை, முச்சி, ஓதி, கூழை, கதுப்பு, குழல் போன்றவை சுட்டப்படுகின்றன. பொதுவாகத் தலைவி, தலைவன் அருகில் இருக்கும் போது மகிழ்ச்சியால் கூந்தலில் மலர்களைச் சூடியும் நெய்பூசியும் அழகு செய்வாள். தலைவி, தலைவனைப் பிரிந்திருக்கும் போது கூந்தலில் மலர்களைச் சூடாமலும் வேறு ஒப்பனை செய்யாமலும் தன் துன்பத்தை வெளிக்காட்டுவாள். கலித்தொகையில், தலைவி கூந்தலை அலங்கரிப்பதன் வாயிலாக அவளின் இன்பஉணர்வு வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இதனை,

“நெய்இடை நீவி மணிஒளிவிட்டன்ன”

(கலி.22: 12)

என்ற பாடலடி விளக்குகின்றது. தலைவி கூந்தலில் நெய்யினைப் பூசி, நீலமணி ஒளி வீசுவதைப் போல பிரகாசிக்கும் கூந்தலை உடையவளாக இருக்கின்றாள் என்பதை இதன்வழி அறியலாகின்றது.

## கண்கள்

மொழிசாரா செய்திப்பரிமாற்றத்தின் மூலம் உள்ளக்கருத்தை வெளிப்படுத்துவதில் கண்கள் பெரும்பங்கு வகிக்கின்றன. கண்கள், மனதின் வாயில் ஆகும். தலைவனும் தலைவியும் ஒரேநேரத்தில் ஒருவரையொருவர் விருப்போடு நோக்கி, உள்ளத்திற்குள் அடங்காத காதல் வேட்கையை நோக்கின் வழி வெளிப்படுத்துவர். இதனைத் தொல்காப்பியர்,

“நாட்டம் இரண்டும் அறிவுடம் படுத்தற்குக்
கூட்டி யுரைக்கும் குறிப்புரை யாகும்”5

என்று குறிப்பிட்டுள்ளார். காதலர்களின் கண்கள் இரண்டும் அவர்களின் உள்ளன்பை அறிவித்து உடம்படுத்துவதற்குப் பேசாமல் பேசிக் கொள்கின்றன என்பது இந்நூற்பாவின் கருத்தாகும்.

வலக்கண் துடித்தால் கெட்டது, இடக்கண் துடித்தால் நல்லது என்ற நம்பிக்கை மக்களிடையே நிலவி வருகின்றது. சங்ககாலத்தில் வலக்கண் துடித்தால் ஆடவருக்கும், இடக்கண் துடித்தால் பெண்டிருக்கும் நன்மை விளையும் என்ற நம்பிக்கை இருந்து வந்துள்ளது. இதனை,

“நல்எழில் உண்கணும் ஆடுமால் இடனே”

(கலி.11: 22)

என்ற பாடலடி எடுத்துரைக்கின்றது. இங்கு, மகிழ்ச்சியான செய்தி வரும் என்பதைத் தெரிவிக்கும் அறிகுறியாகக் கண் துடிக்கின்றது. பொருள்வயிற் பிரிந்த தலைவன், விரைவில் திரும்பி வருவான் என்பதை முன்னறிவிக்கும் விதமாகத் தலைவியின் இடக்கண் துடிக்கின்றது என்பது புலனாகின்றது. இவ்வாறு மொழியின்றி பார்வையே செய்திகளை உணர்த்தக்கூடிய தன்மையைக் காணமுடிகிறது.

## தோள்

தலைவன், தலைவியின் மார்பில் மட்டுமல்லாது தோளிலும் தொய்யில் எழுதுவது உண்டு. முதன்முதலாகத் தலைவன் தலைவியைத் தொலைவில் பார்க்கும் போது, அவள் அணங்குத் தெய்வமோ? என்று ஐயுறுவான். பின்னர் உற்றுநோக்கிச் சில அடையாளங்களால் இவள் பெண்ணே என்று தெளிவு பெறுவான். அந்தத் தெளிவைத் தரும் அடையாளங்கள் பலவற்றுள் மார்பிலும் தோளிலும் எழுதிய தொய்யிலும் ஒன்றாகும்.

“என்தோள் எழுதிய தொய்யிலும்”

(கலி.18: 3)

இப்பாடலடி வழி, முன்பு தலைவியின் தோளில் அன்பு மிகுதியால் எழுதிய தொய்யிலை தலைவன் நினைத்துப் பார்க்க வேண்டும் என்ற செய்தியை அறியமுடிகிறது. இங்கு, தலைவியின் தோளில் எழுதப்பட்ட தொய்யிலை எண்ணிப் பார்த்து, இளமைநலத்தை விரும்பித் தலைவன் பொருள்வயிற் பிரிவைக் கைவிட வேண்டும் என்று ‘செலவழுங்குவித்தல்’ நிலை உணர்த்தப்பட்டுள்ளது.

“வளையானா நெகிழ்போடும் தோளாயின்”

(கலி.34: 19)

என்ற பாடலடி வாயிலாகத் தலைவியின் அழகு, தலைவனின் பிரிவினை ஆற்றாமல் கெட்டுவிட்டது என்பது புலனாகின்றது. தலைவனைப் பிரிந்ததால், தலைவியின் தோள்களில் இருந்து வளைகள் கழன்று உதிருகின்றன என்பதே இங்குப் புலப்படுத்தும் செய்தியாகும். வளைகள் கழன்று உதிர்ந்த தோள்கள், தலைவியின் பிரிவாற்றாமையை உணர்த்துகின்றன. இவ்வாறாகத் தோள் வாயிலாகச் செலவழுங்குவித்தல், பிரிவாற்றாமை ஆகிய செய்திகள் புலப்படுகின்றன. அதோடு, தொய்யில் எழுதுதல் எனும் சங்ககால வழக்கமும் தெரிகின்றது. இதிலிருந்தே இன்றைய பச்சை குத்துதல் தோன்றியிருக்கும். உடலசைவுகள் வழியிலான செய்திப்பரிமாற்றத்தில் பெரும்பாலும் உடல்உறுப்புகளின் வழியே செய்திகள் உணர்த்தப்படுகின்றன. ஆனால், தொய்யில் எழுதுதல் எனும் அலங்காரத்தின் வாயிலாகவும், உடலில் அணியப்படும் தோள்வளை என்ற அணிகலன்களாலும் செய்திகள் பரிமாறப்பட்டுள்ள முறையானது புலப்படுத்தப்பட்டுள்ளன.

## கைகள்

மனிதர்கள் தங்களுக்கு ஏற்படும் உணர்ச்சிகள் பலவற்றையும் உடல் உறுப்புகளை அசைத்து வெளிப்படுத்துதல் என்பது இயல்பான ஒன்றாகும். பல சொற்கள் மூலம் கொள்ளும் மொழித்தொடர்பை (Verbal Communication) விட பொருத்தமான வேளையில், பொருத்தமான சூழலில் கைகள் கொண்டு பிறர் மெய்யைத் தொடுவதால் விளையும் நேர்த்தொடர்பு (Direct Contact), ஒருவர் தம் மனக்குறிப்பை உணர்த்தவல்லது என்பர்,

உளவியல் அறிஞர்கள். கை குவித்தல் என்பது, வணக்கம் என்ற பொருளுடன் கெஞ்சிக் கேட்டல் என்ற பொருளையும் தரும். தலைவி பாடும் வள்ளைப் பாடலைத் தலைவன் மறைவாக நின்று கேட்கின்ற முறையினை,

> "...... கைகவியாச் சாயல்"
>
> (கலி.42: 29-30)

என்ற பாடலடி சுட்டுகின்றது. தன்னுடைய வருகையைத் தலைவியிடம் கூறாதிருக்குமாறு தோழியிடம் கைகுவித்து வேண்டுகின்றான். இங்கு, கைகுவித்தல் என்பது இன்றைய வழக்கில் காணப்படுவதைப் போலவே கெஞ்சிக் கேட்டல் (தயவு செய்து) என்பதைக் குறிக்கின்றது.

## நகை

நகை என்பதற்குச் 'சிரிப்பு' என்பது பொருளாகும். தொல்காப்பியர் நகைக்குரிய காரணங்களாக எள்ளல், இளமை, பேதைமை, மடன் என்ற நான்கினைக் குறிப்பிடுவதை,

> "எள்ளல் இளமை பேதைமை மடனென்று
> உள்ளப்பட்ட நகைநான் கென்ப"6

என்ற நூற்பா வழி அறியலாகின்றது. உள்ளத்தில் தோன்றுகின்ற நகைச்சுவை உணர்ச்சி, காண்போருக்குப் புலப்படும் வண்ணம் மெய்ப்பாடாக வெளிப்படுகின்றது. அருந்துவதற்கு நீர் கேட்ட தலைவன், நீர் கொடுத்த தலைவியின் வளைக்கரத்தைப் பற்றிய போது பதறிய தலைவி, உண்ணுநீர் விக்கினான் என்று தாயிடம் பொய் சொல்கின்றாள். இதனை,

> "கடைக்கண்ணாற் கொல்வான்போல் நோக்கி நகைக்கூட்டம்
> செய்தான்அக் கள்வன் மகன்"
>
> (கலி.51: 15-16)

என்ற பாடலடிகள் பதிவு செய்துள்ளன. தலைவி, தாயிடம் தன்னைக் காட்டிக் கொடுக்காமல் தன் காதலை ஏற்றுக்கொண்டாள் என்ற மகிழ்ச்சியைத் தலைவன் நகைப்பின் மூலம் இங்கு வெளிப்படுத்துகின்றான்.

## அழுகை

நகை மட்டும் அல்லாது அழுகையும் செய்தியைத் தெரிவிக்கும் மொழிசாரா செய்திப்பரிமாற்றம் ஆகும். பிறந்த குழந்தையின் அழுகையும் ஏதோ ஒரு செய்தியைத் தெரிவிக்கின்றது. அழுகை என்ற மெய்ப்பாடு தோன்றும் நிலைக்களன்களாக,

> "இளிவே இழவே அசைவே வறுமையென
> விளிவில் கொள்கை அழுகை நான்கே"7

என்று தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ளார். இலக்கியங்களில் பல இடங்களில் தலைவன், தலைவியின் பிரிவுத்துயரைப் பெரிதாக எண்ணாது 'வினையே ஆடவர்க்கு உயிரே' என்று பொருள்வயிற் பிரிகின்றான். அப்போது, தலைவனின் பிரிவை ஆற்றாது தலைவியின் கண்கள் கலங்குகின்றன. கண்ணீர் வடிக்கின்றன. இதனை,

> "................................. கலங்குபு
> பொறைதளர்பு பனிவாரும் கண்ணாயின்"
>
> (கலி.34: 14-15)

என்ற கலித்தொகைப் பாடலடிகள் தெரிவிக்கின்றன. இங்கு, தலைவனைப் பிரிந்து தலைவிக்கு ஏற்பட்ட பிரிவுத்துயரினை அவளுடைய அழுகை (கண்ணீர்) தெரிவிக்கின்றது. நகை, அழுகை போல வெகுளி என்ற மெய்ப்பாடும் கலித்தொகை (39) என்ற பாடலில் இடம்பெற்றுள்ளது.

## ஒலிவழிச் செய்தி

பரத்தையர் கூட ஒலிவழிச் செய்திகளைப் பரிமாறியமையை சங்க இலக்கியங்களில் காணமுடிகிறது. தலைவன், தலைவியுடன் இல்லின்கண் இருக்க, பரத்தையர் கதவைத் தட்டி, கைவளையலை அசைத்து, ஒலி எழுப்பித் தம் வருகையை அறிவித்தனர் என்பதை,

> “ஓருர்தொக்கு இருந்தநின் பெண்டிருள் நேராகிக்
> களையாநின் குறிவந்து, எம்கதவஞ்சேர்ந்து அசைத்தகை
> வளையின்வாய் விடல்மாலை மகளிரை நோவேமோ”

(கலி.68: 7-9)

என்ற கலித்தொகைப் பாடலடிகள் மெய்ப்பிக்கின்றன. இங்குப் பரத்தையின் வருகை என்ற செய்தி, வளையொலி வாயிலாக வெளிப்படுத்தப் பெற்றுள்ளது.

துளைக்கருவிகளுள் குழல், கொம்பு, சங்கு போன்றவை அடங்கும். சங்ககாலத்தில் துளைக்கருவிகள் வாயிலாகச் செய்திகள் பரிமாறப்பட்டன. தலைவன், தலைவியிடம் பிறர் அறியாமல் கூற விழைந்த செய்தியைப் பலரோடு நிகழும் குரவைக்கூத்தின் போது, ஆம்பல் குழலில் இசைத்து அவளுக்கும் தனக்கும் மட்டும் தெரிந்த ஒலியினால் புலப்படுத்தினான் என்பதை,

> “தூங்கும் குரவையுள் நின்பெண்டிர் கேளாமை
> ஆம்பற் குழலாற் பயிர்பயிர் - எம்படப்பைக்
> காஞ்சிக்கீழ்ச் செய்தேம் குறி”

(கலி.108: 61-63)

என்ற பாடலடிகள் எடுத்துரைக்கின்றன. இங்கு, வாய்ச்சொற்கள் இன்றி ஒலி மூலம் தலைவி உணரும்படி, குழலோசை செய்தியைப் பரிமாறுகின்றது.

நரம்புக்கருவிகளுள் மிகவும் பழமையானது யாழ். யாழ் மீட்டிப் பாடல் பாடுபவர் பாணர் எனப்பட்டனர். பாணர் என்பதற்கு இசை பாடுவோர் அல்லது பண் பாடுவோர் என்பது பொருளாகும். யாழிசையைக் கொண்டு மதம் கொண்ட யானையை அடக்கிய நிகழ்வினைச் சங்க இலக்கியத்தில் காணலாம். பாகன் குத்துக்கோலால் குத்த தன் நெறியில் செல்லாத ஆண் யானை, மென்மையான யாழ் ஓசைக்குக் கட்டுப்பட்டதை,

> “காழ்வரை நில்லாக் கடுங்களிற்று ஒருத்தல்
> யாழ்வரைத் தங்கியாங்கு”

(கலி.2: 26-27)

என்ற கலித்தொகைப் பாடலடிகள் சுட்டுகின்றன. இங்கே இசைக்கு மயங்காத உயிர்களே இல்லை என்பதைக் காணமுடிகிறது. இவ்வாறு நெறி மாறிய யானையைக் கட்டுப்படுத்தவும், பாணர்களின் மனவிருப்பத்தை வெளிப்படுத்தவும் யாழோசை வழிச் செய்திகள் பரிமாறப்பட்டுள்ளன.

## தொகுப்புரை

- வாய்மொழியாகவோ, எழுத்து வடிவமாகவோ இல்லாமல் நிகழும் மொழிசாரா செய்திப்பரிமாற்றத்தின் வழி கலித்தொகையில் செய்திகள் பரிமாறப்பட்ட முறைமை இவ்வாய்வுக்கட்டுரையில் ஆராயப்பட்டுள்ளது.
- உடல்மொழி சார்ந்த விளக்கங்களுடன் அதற்கான சான்றாதாரங்கள் கலித்தொகை வழி கண்டறியப்பட்டுள்ளன. அவற்றுள் ‘உடலசைவுகள், சைகைகள், மெய்ப்பாடுகள்’ ஆகியவற்றின் மூலம் செய்திகள் பரிமாறப்பட்ட விதம் இக்கட்டுரை வெளிக்கொணரப்படுகின்றது.
- உடலசைவுகளில் உடல் உறுப்புகளான தலை, கூந்தல், கண்கள், தோள், கைகள் போன்றவற்றின் வாயிலாகச் செய்திகள் பரிமாறப்பட்ட தன்மைகள் எடுத்துரைக்கப்பட்டுள்ளன.
- கலித்தொகையில், களவொழுக்கத்தை நீட்டித்த தலைவன் தன்னுடைய செயலுக்கு நாணித் தலைகுனிகின்றான். தலைவியைக் காணாத தலைவனின் மனவருத்தத்தையும் செயலற்ற தன்மையையும் தலைகுனிதல் என்ற உடலசைவு உணர்த்துகின்றது.
- உடல் உறுப்புகளுள் கண்கள் வழியே பெரும்பாலான செய்திகள் பரிமாறப்பட்டுள்ளன என்ற முடிவினை இவ்வாய்வுக் கட்டுரையால் கண்டறிய முடிகிறது.
- தொல்காப்பியர் கூறிய எண்வகை மெய்ப்பாடுகளும் மொழிசாரா செய்திப்பரிமாற்றத்திற்கு உதவுகின்றன. பொதுவாக, நகை என்ற மெய்ப்பாடானது மகிழ்ச்சியையே உணர்த்தும். ஆனால், கலித்தொகை மகிழ்ச்சியோடு துன்பநிலைகளை வெளிப்படுத்துவதையும் காணமுடிகிறது.
- பொதுவாக, அழுகையானது தலைவன், தலைவியின் பிரிவுத்துயரை உணர்த்தும். ஆனால், பரத்தையின் பிரிவுத்துயரையும் அழுகை என்ற மெய்ப்பாடு வழி காணமுடிகிறது.
- இசைக்கருவிகளில் எழுப்பப்படும் நுட்பமான ஒலி வேறுபாடுகள், செய்திகளைத் தெரிவித்தன. அவ்வொலி வேறுபாட்டையும் செய்திகளையும் புரிந்து கொள்கின்ற அறிவுக்கூர்மை மிக்கவர்களாகச் சங்ககால மக்கள் திகழ்ந்தனர் என்பதை இவ்வாய்வுக் கட்டுரை வெளிக்கொணர்கின்றது.

## அடிக்குறிப்புகள்

1. தமிழ் - ஆங்கில அகராதி, 1988, ப.211
2. வெ.கிருட்டிணசாமி, தகவல் தொடர்பியல், 1992, ப.3
3. இரா.ரம்யா மகேஸ்வரி, இலக்கிய மலர்கள், ப.12
4. வெ.நல்லதம்பி, தமிழர் வாழ்வில் தகவலியல், ப.119
5. தொல்.பொருள்.களவு., நூ.5
6. தொல்.மெய்., நூ.4
7. தொல்.மெய்., நூ.5